1st August 1966]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தக் கேள்வி சொறி சிரங்கைப் பற்றியது. அதுபற்றிப் பதில் சொல்லும்போது அப்படி ஒன்றும் இல்லை என்று சொன்னேன். மதிய உணவு சுத்தமான முறையில் அளிக்கப்படுவதோடு கூட புஷ்டியானதாகவும் அளிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நம்முடைய சர்க்காரின் சார்பிலேயே ஹெல்த் சர்வே எடுக்கப்பட்டது. அதில் தான் டெபிஷியன்சி, சொறி சிரங்கு, போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் 50 சதவிகிதத்திற்கு மேல் என்று தெரியவந்திருக்கிறது. ஆகவே மதிய உணவினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பது பற்றி கணக்கு எடுக்கப்பட்டுள்ளதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மதிய உணவினாலே சொறி, சிரங்கு ஏற்பட்டதான தகவல் அரசாங்கத்தினிடம் இல்லை.

*Somasundaram Mills, Coimbatore*

* 6. *Q.*—SRI M. KALYANASUNDARAM : } SRI A. K. SUBBIAH : } Will the Hon. the Chief Minister be pleased to state the details of steps taken by the Government to lift the lock-out declared by the management of Somasundaram Mills, Coimbatore, from 4th March 1966?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கோயம்புத்தூர் தொழிலாளர் துறை துணைக் கமிஷனர், ஆலை நிர்வாகத்தினருடனும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். அதனால் இரு தரப்பினரும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தனர். 16—3—1966 தேதியன்று வேலையைத் தொடங்க இருதரப்பினரும் ஒப்புக் கொண்டனர். அதன்படி, நிர்வாகத்தினர் கதவடைப்பை நிறுத்தி, 15/16—3—1966 தேதி இரவு 1 மணியிலிருந்து ஆலையை மீண்டும் திறந்தனர். 16—3—1966 தேதியன்று மூன்றுவது ஷிப்டிலிருந்து ஆலையில் இயல்பாக வேலை தொடங்கியது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** கோவை மாவட்டத்தில் தற்சமயம் எத்தனை ஆலைகளில் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது ? அவைகளைத் திறப்பதற்கு எடுத்த நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலளிக்கும்போது முடிவாகச் சொல்கிறேன் (சிரிப்பு).

அரிசன மாணவ விடுதிகளில் சரும நோய்கள்

* 7. **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டில் எத்தனை ஆதித் திராவிட மாணவர் விடுதிகளில், சொறி, சிரங்கு போன்ற நோய்கள் உண்டாயின ?

[1st August 1966

(இ) இவைகள் பற்றித் தடுப்பு முறையாக அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) பெண்களுக்கும் ஆண்களுக்கும் உரிய 57 அரசாங்க மாணவர் இல்லங்கள்.

(இ) அருகிலுள்ள மருத்துவ அதிகாரியிடமிருந்து விட்டமின் மாத்திரைகளைப் பெற்று விடுதிகளில் தங்கும் மாணவ மாணவிகளுக்கு நோய்த் தடுப்பு வகையில் வழங்குமாறு விடுதிக்காப்பாளர்களுக்கும் (வார்டன்) மூதாய்களுக்கும் (மேட்ரன்) உத்திரவிடப்பட்டுள்ளது. சொறி, சிரங்கு முதலியவற்றை மேலும் பரவ விடாமல் தடுக்கும் பொருட்டு, அவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றவர்களிடமிருந்து தனியே பிரித்து வைக்கப்பட்டனர். அவர்களுடைய உடைகளைக் கிருமி கொல்லி சோப்புக்களைக் கொண்டு அன்றாடம் தூய்மைப்படுத்தும்படி அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மாணவர் இல்லங்களிலுள்ள மாணவ மாணவிகளுக்கு 'லைப்பாய்' சோப்புகள் வழங்கப்படுகின்றன.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கிட்டத்தட்ட நூற்றுக்கு மேற்பட்ட ஆதித்திராவிட மாணவ மாணவிகள் விடுதிகளில் மதிய உணவினால் பாதிக்கப்பட்டு சொறி, சிரங்குக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. இதைத் தடுப்பதற்கு மாணவ மாணவி விடுதிகளுக்கு மருத்துவ நெறியாளர் தெரிவித்த திட்டம் எந்த அளவில் இருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. இந்த விடுதிகளில் உள்ள மாணவ மாணவிகளுக்கு வைட்டமின் மாத்திரைகள் தரப்படுகின்றன. இன்னும் லைப்பாய் சோப் அளிக்கப்படுகிறது. அந்த நோயைத் தடுக்க, குணப்படுத்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்த ஆதித் திராவிட மாணவ மாணவி விடுதிகளுக்கென்று ஐந்தாறு டாக்டர்களைத் தனியாக நியமிக்கலாம் என்பதாக மருத்துவத்துறை நெறியாளரினால் யோசனை கூறப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அதன்பேரில் இந்த அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அநேகமாக விடுதிகள் உள்ள நகரங்களில் அரசாங்க ஆஸ்பத்திரிகளே இருக்கின்றன. அந்த ஆஸ்பத்திரிகளுக்கு இந்த நோயாளிகளை அனுப்பி சிகிச்சை அளிக்க முடியும். மிகப் பெரிய விடுதிகளுக்கு தனியாகவே டாக்டர்களை நியமிக்கவும் சொறி சிரங்குக்கு மட்டும் இல்லை, பொதுவாகவே எல்லா வியாதிகளில் இருந்தும் மாணவ மாணவிகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுப்பது பற்றியும் அரசாங்கம் யோசனை செய்யும்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** ஒரு சில இடங்களில் இந்த விடுதிகளுக்கு நல்ல ஆரோக்கியமான கட்டடம் இல்லாத காரணத்தினால்தான் சுகாதார வசதிக் குறைவினால்

இத்தகைய வியாதிகள் வருகின்றன. ஆகவே, இதுபற்றி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி இந்த விடுதிகளுக்கு நல்ல காற்றோட்டமான, ஆரோக்கியமான இடவசதியை ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த விடுதிகளுக்கு நல்ல கட்டட வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் கருத்தும். சில இடங்களில் தான் அரசாங்ககத்தின் சொந்தக் கட்டடம் இருக்கிறது. மேலும் கூட இதுமாதிரியாக சொந்தக் கட்டடம் கட்டும் யோசனையும் இருக்கிறது. சொந்தக் கட்டடம் இல்லாத இடங்களில் வாடகைக் கட்டடத்தில் தான் இருக்க வேண்டியிருக்கிறது. அதிக மாணவர்கள் உள்ள இடங்களில் சட்டென்று சொறி, சிரங்கு போன்ற தொத்துநோய் பரவாமல் இருக்க தக்க கவனம் செலுத்தப்படும்.

**திரு. நா. இராசாங்கம் :** அரசாங்க விடுதிகளுக்கு, அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இருந்து ஒவ்வொரு வாரமும் டாக்டர் வருவதற்கு ஐந்து ரூபாய் என்று அலவன்சு கொடுக்கப்பட்டு வந்ததே, அது நிறுத்தப்பட்டுவிட்டதா என்று அறியவிரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அப்படி ஒன்றும் நிறுத்தப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இப்போது எல்லா ஹாஸ்டல்களிலும் விலைவாசி ஏற்றத்தினால், குறைந்த விலையில் கிடைக்கிற கத்தரிக் காயையே பகல் இரவு இரண்டு வேளைகளிலும் வாங்கி குழம்பு வைக்கிறார்கள். கத்திரிக்காயினால் சொறி, சிரங்கு ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். இதை அரசாங்கம் ஆராய்ச்சி செய்து, வேறு குழம்பு போட ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கத்தரிக்காயினால் சொறி சிரங்கு வருவதாகச் சொல்ல முடியாது. மஞ்சள் பூசனியினால் வருவதாகச் சொல்வதுண்டு. இதுபற்றிக் கூட நான் அங்கங்கே போகும்போது அதிகம் மஞ்சள் பூசனிக்காயைப் போட வேண்டாம் என்று சொல்லி வருகிறேன்.

**திரு. முனு. ஆதி :** தனிப்பட்ட முறையில் ஹாஸ்டல் நடத்துகிறவர்களுக்கு இடவசதி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அவர்களுக்கு பில்டிங் கிராண்டு என்று தருகிற உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனிப்பட்டவர்கள் நடத்தும் விடுதிகளுக்கும் கட்டட மானியம் தருகிறோம்.

**திரு. சா. கணேசன் :** சொறி, சிரங்கு பொதுவாக ஒரு குழந்தைக்கு வந்தால் அந்தக் குழந்தை மூலம் மற்றவர்களுக்கு சீக்கிரத்தில் பரவக்கூடிய ஒரு தொத்து நோய். ஆகவே, சொறி சிரங்கு வந்த குழந்தைகளைத் தனியாகப் பிரித்து வைத்து சிகிச்சை

அளிக்கவும், மற்றவர்களுடைய உடைகளைத் தனியாக சுகாதார முறைப்படி வெளுத்து அளிக்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப் படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** என்னுடைய பதிலில் நான் அதைத்தான் சொன்னேன். "சொறி, சிரங்கு முதலியவற்றை பரவ விடாமல் தடுக்கும் பொருட்டு, அவற்றால் பாதிக்கப்படவர்கள் மற்றவர்களிட மிருந்து தனியே பிரித்து வைக்கப்பட்டனர். அவர்களுடைய உடைகளைக் கிருமி கொல்லி சோப்புக்களைக் கொண்டு அன்றாடம் தூய்மைப்படுத்தும்படி அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது". கனம் அங்கத்தினர் சொல்கிற ஏற்பாடுகள் அமலில் இருக்கின்றன.

**திரு. சு. சின்னையன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த
11-00 a.m. மாதிரி சொறி, சிரங்குகளை அகற்றுவதற்கு அங்கங்கே இருக்கிற சர்க்கார் மருத்துவ மனைகளிலே இருக்கிற டாக்டர்கள் ஹாஸ்டல் களுக்கு வாரத்திற்கு ஒரு முறையாவது சென்று பார்த்து வருகின்ற ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** நான் முன்னமேயே சொன்னேன், பெரிய விடுதிகளுக்குச் சென்று கவனிப்பதற்கு ஒரு சில டாக்டர் கள் சென்றால் அவர்களுக்கு அதற்காக அலவன்ஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசிலனை செய்யுமென்று. ஆனால் எல்லா விடுதிகளுக் கும் இந்த ஏற்பாட்டைச் செய்ய முடியாது.

### தமிழகத்தில் கால்நடைப் பண்ணை

* 8. கேள்வி.—திரு. ம. கமலநாதன் :
திரு. எஸ். ஜே. ராமசாமி : } கனம் உள்துறை அமைச்சர் 4-11-1965-ல் கேள்வி எண் 273-க்கு அளித்த பதிலை யொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

இந்திய சர்க்காரால், தமிழகத்தில் ஒரு கால் நடைப் பண்ணை நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மாட்டுப் பண்ணையை அமைப்பதற் காக இந்திய அரசுக்கு, ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவைச் சேர்ந்த மன்னூர் கிராமத்திலுள்ள ஓர் இடம் குறிப்பிடப்பட்டது. மத்திய அரசின் குழு ஒன்று அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு ஆய்வு நடத்தியது. அந்த இடம் குறித்து மேற்கொண்டும் சில விவரங்களை அக்குழு கேட்டுள்ளது. அவை இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மத்திய அரசு இந்தப் பண்ணைக்கு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** எஸ்டிமேட்டட் அமௌண்ட் 50 லட்சம் ரூபாய்.